15.02.2024



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.227/2011**

**வா.சா. 1–செழியன், த/பெ. ரெங்கசாமி**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 1945ம் வருடம் பிறந்தேன். 2011ம் வருடம் எனக்கு 66 வயது என்றால் சரிதான். வழக்கறிஞருக்கு வழக்குரை சம்மந்தமாக விவரம் சொன்னது நான் தான். ஆரம்பத்தில் 1முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தை என் தகப்பனார் 1977ம் வருடம் கிரையம் வாங்கியதாக சொல்லி தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரையாவணம் ஏற்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது, என்னுடைய தகப்பனார் சொல்லி தான் தெரியும்.

02. வா.சா.ஆ.1 ஐ கிரையம் செய்த ராஜய்யா வகையறாவுக்கு பூர்வீகம் என்று சொன்னார்கள். என்னுடைய தகப்பனார் கிரையம் வாங்கும் போது அளந்து பார்த்து தான் வாங்கினார். வா.சா.ஆ.1 பத்திரத்தின் அளவுகள் எனக்கு ஞாபகமில்லை, பல வருடங்கள் ஆகிவிட்டது. என் தகப்பனார் வா.சா.ஆ.1 ஐ கிரையம் வாங்கும் போது அந்த இடம் கூரை வீடு மற்றும் காலியிடமாக இருந்தது. கூரை வீட்டை

15.02.2024



வாங்கியதாக தான் வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். உங்கள் தகப்பனார் சொத்து வாங்கும் போது, அந்த சொத்திற்கு வடக்கு திசையில் பொம்மன்னன் இடம் இருந்தது. பொம்மன்னன் இடம் வடபுறம் எவ்வளவு, தென்புறம் எவ்வளவு என்று என்னால் சொல்ல இயலாது, பல வருடம் ஆகிவிட்டது, ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். நான் ஆவணத்தை பார்த்தால் சொல்ல முடியும் என்று சொல்லும் ஆவணம் சித்ரா என்பவரிடமிருந்து என் தகப்பனார் வாங்கிய ஆவணத்தை தான் சொல்கிறேன்.

03. சித்ரா என்பவரிடமிருந்து சொத்து வாங்கும் போது, கூரைவீடும், காலிமனையும் இருந்தது. அசல் வழக்கின் தாவா சொத்தில் கிழமேல், தென்வடல் அளவு என்ன என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். நீங்கள் அனுபவிக்கும் சொத்தின் நீள அகலம் உங்களுக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல, எனக்கு ஞாபகமில்லை. உங்கள் தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்தின் நத்தம் சர்வே எண் என்வென்றால் பத்திரத்தை பார்த்தால் தான் சொல்ல இயலும். சித்ரா என்பவரிடமிருந்து நீங்கள் கிரையம் வாங்கிய சொத்தின் நத்தம் சர்வே எண் தெரியுமா என்றால் என்னுடைய தகப்பனார் வாங்கிய

15.02.2024



இடத்திற்கும், நான் வாங்கிய இடத்திற்கும் ஒரே சர்வே எண் தான், ஆவணத்தை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

04. நீங்கள் யு.டி.ஆர் காலத்தில் சித்ரா பெயரில் இருந்ததததை கிரையம் வாங்கியுள்ளீர்கள், அது உண்மையில் சித்ராவின் சொத்து தானா என்றால் அது சித்ரா சொத்து தான், அதனால் தான் அவரிடமிருந்து எழுதி வாங்கினேன். வழக்குரையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வழக்குரையில் பத்தி 4 ல் சித்ரா தன் பெயரில் ஏற்பட்ட தவறான பட்டாவை வைத்துக்கொண்டு, சித்ராவுக்கு எவ்வித அனுபவமும், உரிமையும் இல்லாமல் இருந்தபோதும், நான் அவரிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் வழக்குரையில் சொல்லியுள்ள விவரம் உண்மைதான்.

05. இன்றைய தேதியில் பட்டா வா.சா.ஆ.6 ல் உள்ள நத்தம் சர்வே எண்.492/12-க்கு அடுத்த வடபுறம் சொத்து யாருடையது என்றால் சாட்சி பார்வதி என்பவரின் கணவர் பெயரில் இருப்பதாக கூறுகிறார், கணவர் பெயர் ஞாபகமில்லை என்று கூறுகிறார். அவருடைய மகன் பெயர் செல்லதுரை. சாட்சி தற்போது அவர் பெயர் மலையாண்டி என்று கூறுகிறார். வா.சா.ஆ.6 பட்டாவில் உள்ள சொத்திற்கான

15.02.2024



புலப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். சர்வே எண்.492/12ன் விஸ்தீரணம் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும்.

(சாட்சி கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.